செ.வெ.எண்: 25 நாள்:11.08.2021

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கடலூர் கோட்டம் மூலம் பாரத பிரதமரின் "அனைவருக்கும் வீடு" வழங்கும் திட்டத்தின் மூலம் நாகப்பட்டினம் மாவட்டம், சம்பாதோட்டத்தில் 320 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கு நீர் நிலை மற்றும் ஆட்சேபகரமான புறம்போக்கு பகுதிகளில் வசித்து வரும் ஆக்கிரமிப்புதாரர்களை மறு குடியமர்வு செய்ய முன்னுரிமை அளிக்கப்படும். நகர்புற வீடற்ற ஏழைகளுக்கும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கும் முன்னுரிமை அளித்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு குடியிருப்புகள் ஒதுக்கப்பட உள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பு தொகை போக மீதம் உள்ள ரூ.1.30 இலட்சத்தை பயனாளிகள் பங்குத்தொகையாக வழங்க வேண்டும். தகுதியானவர்கள் தங்கள் பெயரிலோ, குடும்ப உறுப்பினர்கள் பெயரிலோ வேறெங்கும் வீடுகள் இல்லை எனவும், மாத வருவாய் ரூ.25,000/-க்குள் தான் எனவும் சான்றளிக்க வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியம், கடலூர் கோட்ட அலுவலகம், எண்.11, ஆற்றங்கரை வீதி, புதுப்பாளையம், கடலூர்-1. என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம் அல்லது நாகப்பட்டினம் நகரம், நாகூர் சம்பாதோட்டம் திட்டப்பகுதியில் நேரடியாக உதவிப்பொறியாளர் கைப்பேசி எண்: 8838877874 மற்றும் உதவி நிர்வாகப்பொறியாளர்கள் கைபேசி எண்கள்: 8610671056, 9443672920 அவர்களை தொடர்புகொள்ளுமாறு **மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**